பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 08 | சனிக்கிழமை | 22.03.2025 | அதிர்வு 229

## யாழில் தீயில் எரிந்து குடும்பப் பெண் சாவு!

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். கோப்பாய் தெற்கு பகுதியில் தனிமையில் வசித்து வந்த நான்கு பிள்ளைகளின் தாயார் தீயில் எரிந்து உயிரிழந்துள்ளார்.

05

## கொழும்பு மாநகர சபையையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும்

### அமைச்சர் சந்திரசேகர் நம்பிக்கை



நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபையையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், நிராகரிப்பு இன்றி தேசிய மக்கள் சக்தி

05

# ஏப்ரல் 5 இல் மோடி இலங்கை விஜயம்

## இந்திய அரசுடன் இணைந்து சம்பூரில் மின்நிலையம் அமைக்கத் தீர்மானம் என்று ஜனாதிபதி தெரிவிப்பு



**“வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருவார். இதன்போது சம்பூர் மின்நிலைய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.”**

**- இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

05

## பட்ஜட் 114 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

### ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்



2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வரவு – செலவுத் திட்டம்) நேற்று 114 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தொடர்பான வாக்கெடுப்பு நேற்று இரவு 7.40 மணிக்கு ஆரம்பமானது. இதற்கு ஆதரவாக 159 வாக்குகளும், எதிராக 45 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதற்கமைய 2025ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 114 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

05




இலங்கையின் வடக்கு கடலில் – இந்தியாவின் தென்முனையில் – பாரதத்தின் பாதுகாப்பைச் சுரண்டக் கூடிய – நோண்டத்தக்க – சுற்றுலாத் திட்டம் ஒன்றை இலங்கைத் தரப்பு முழுமூச்சுடன் ஆரம்பிக்க முனைந்திருக்கின்றது.

இது தொடர்பில் இந்தியாவின் பிரதிபலிப்பு பெரும்பாலும் சாதகமாக இருக்காது என விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இலங்கையின் வடக்குக் கடலில் இந்தியாவுக்கு இடையே கடல் வழியில் ஏறத்தாழ 11 மணல் திட்டுகள் (தீடைகள்) சிறு சிறு தீவுகள் போல ஆங்காங்கே இருக்கின்றன.

சேது சமுத்திரத்தில் உள்ள இந்த 11 தீடைகளில் இலங்கைப் பக்கம் உள்ள ஆறு தீடைகள் இலங்கையின் கடல் எல்லைக்குள் வருகின்றன. எஞ்சிய ஐந்து தீடைகளும் இந்தியக் கடல் எல்லைக்குள், இந்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ளன.

தலைமன்னாரிலிருந்து, இலங்கையின் எல்லையில் உள்ள கடைசி தீடையான ஆறாவது மணல் திட்டு வரை சுற்றுலாப் பயணிகளை

05









# மக்களுக்கு உதவி செய்வதற்குப் பதிலாக உபத்திரங்களைச் செய்யும் அதிகாரிகள்!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் கவலை

"மக்களுக்கு உதவிகளைச் செய்வதற்காக உருவாக்கப்பட்ட பதவிகளில் இருக்கும் சிலர் மக்களுக்கு உதவிகளைச் செய்வதற்குப் பதிலாக உபத்திரங்களையே செய்கின்றனர்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கவலை வெளியிட்டார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஏற்பாட்டில், சபை நிதியில் புதுக்குடியிருப்பு சந்தையினுள் அமைக்கப்பட்ட கடைத்தொகுதி மற்றும் உலக வங்கியின் நிதியில் உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கடைத் தொகுதி என்பனவற்றை ஆளுநர் திறந்து வைத்தார். அத்துடன் சந்தையினுள் மரக்கன்றும் நடுகை செய்தார். அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு பிரதேச சபை மண்டபத்தினுள், திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வூட்டும் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர் அங்கு உரையாற்றுகையில்,

"முன்னைய காலங்களில் எமது மாகாணமே இலங்கையில் தூய்மையான மாகாணமாக இருந்தது. ஆனால், இன்று அது தலைகீழாக மாறிவிட்டது. எப்போது "சொப்பிங் பாக்", "பிளாஸ்ரிக் போத்தல்" என்பன அறிமுகத் தொடங்கியதோ அன்றே எமது சுற்றாடலும் மாசடையத் தொடங்கிவிட்டது.

எங்கள் இடத்தை அழகாக – தூய்மையாக வைத்திருக்க நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் எமது சூழல் அழகாக இருக்கவேண்டும் என்று நினைத்திருந்தால், வீதியில் குப்பைகளைப் போட்டிருக்கமாட்டோம்.

இளமையிலேயே எங்கள் பிள்ளைகளுக்குச் சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருப்பதைப் பழக்க வேண்டும். இன்று இங்குள்ள மாணவர்கள், எதிர்காலத்தில் பெரியவர்களாகும் போது சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருப்பவர்களாக மாறவேண்டும்.

உங்களுக்கு நல்லதொரு பிரதேச செயலராக விஜயகுமார் கிடைத்திருக்கின்றார். அவர் இந்தப் பகுதியில் சிறப்பான மாற்றங்களைச் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது." – என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வுகளில் முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச.யசிந்தன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இ.விஜயகுமார், புதுக்குடியிருப்பு பிரதேச சபைச் செயலர் ச.கிருசாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட திண்மக் கழிவகற்றலுக்காக அட்டை மற்றும் துண்டுபிரசுரம் என்பன ஆளுநரால் இந்த நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# கிராண்ட்பாஸ் துப்பாக்கிச்சூடு: சந்தேகநபரின் மனைவி கைது!



கிராண்ட்பாஸ், நாகலகம வீதி பகுதியில் இருவர் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொண்டமை தொடர்பில் மேலுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லம்பிட்டி, கொட்டுவில பகுதியைச் சேர்ந்த 24 வயதான யுவதியே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பில் இதற்கு முன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் மனைவியே தற்போது கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியிருந்தனர்.




# வெலிகம துப்பாக்கிச்சூடு: 06 பேர் நீதிமன்றத்தில் சரண்

2023 ஆம் ஆண்டில் மாத்தறை வெலிகம பெலேன பதியிலுள்ள டபிள்யூ 15 ஹோட்டலுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பான வழக்கின் ஏனைய 06 சந்தேகநபர்களும் மாத்தறை நீதவான் நீதிமன்றில் நேற்று சரணடைந்தனர்.

நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்து அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி நடத்தப்பட்ட இந்தத் துப்பாக்கிச்சூட்டில் கொழும்பு குற்றப் பிரிவின் அதிகாரி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன் உள்ளிட்ட 08 பேரை கைது செய்யுமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றினால் பெப்ரவரி 28 ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி டி சில்வாவும் இதில் உள்ளடங்கியிருந்தார்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டு 20 நாள்களுக்கு பின்னர் தேஷபந்து தென்னகோன் பத்திரமொன்றை தாக்கல் செய்து மாத்தறை நீதவான் நீதிமன்றில் கடந்த புதன் கிழமை சரணடைந்தார். எதிர்வரும் ஏப்ரல் 03 ஆம் திகதி வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.




பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள மற்றைய சந்தேகநபர் ஏற்கனவே வெளிநாட்டுக்கு சென்றுள்ளதாக விசாரணைகளை முன்னெடுத்துள்ள அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

# பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொறுப்பை நான் இராஜினாமா செய்யவில்லை

**புத்திக மனதுங்க தெரிவிப்பு**



பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொறுப்பை தாம் இதுவரை இராஜினாமா செய்யவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக தாம் இடமாற்றம் கோரியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஊடகப்பேச்சாளராக ஒருவர் நியமிக்கப்படும் வரை தம்மால் அந்த பொறுப்பிலிருந்து விலகியிருக்க முடியாது என அவர் கூறினார்

தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை தாம் கட்டாயமாக நிறைவேற்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஹீத்ரோ விமான நிலையம் மூடப்பட்டதால் கொழும்பு - லண்டன் விமான சேவைகள் இரத்து



பிரித்தானியாவின் லண்டனிலுள்ள ஹீத்ரோ விமான நிலையம் நோக்கி புறப்படவிருந்த விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்படி விமான நிலையத்திற்கு அருகிலுள்ள உபமின் நிலையமொன்றில் ஏற்பட்ட தீப்பரவலினால் ஹீத்ரோ விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய அந்த விமான நிலையம் திறக்கப்பட்ட பின்னர் மீண்டும் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும் என ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் தெரிவித்தது.

ஹீத்ரோ விமான நிலையம் நோக்கி புறப்படவுள்ள விமானங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை 1979 என்ற துரித இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி அறிந்துக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்றிச் சென்று அந்தத் தீடைகளில் இறக்கி உல்லாச பயணம் காட்டுவது என்பது இலங்கையின் தற்போதைய திட்டம்.

ஆயினும் இது இந்தியாவின் பாதுகாப்புக்கு இந்திய எல்லை வரை வருகின்ற – இந்தியாவை நெருடுகின்ற – ஒரு திட்டமாக இருக்கும் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

தலைமன்னாரில் இருந்து கடலின் நடுவில் உள்ள ஆறாவது தீடை வரையான சுற்றுலாப் பயணிகள் படகுச் சேவையை விரைவில் ஆரம்பிக்க அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டன.

இலங்கை – இந்திய நாடுகள் இடையே மிகவும் குறுகிய இடைவெளியைக் கொண்ட பிரதேசமாக தலைமன்னார் – இராமேஸ்வரம் பகுதி காணப்படுகின்றது. இங்கேயே சுற்றுலா மேம்பாட்டுத் திட்டமாக படகு சேவை ஆரம்பிக்க இலங்கைத் தரப்பில் அனைத்துப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதற்காக ஆஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆகிய இரண்டு நாடுகளின் இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒருவர் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் ஆறு இருக்கைகள் கொண்ட 10 படகுகளை தலைமன்னார் பகுதிக்குத் தருவித்துள்ளார்.

இந்தப் படகுச் சேவை, தரையைத் தாண்டி கடல் பகுதிக்குள் சுமார் 13 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள 5 ஆவது தீடையையும் தாண்டி 6 ஆவது தீடைப் பகுதி வரையில் இடம்பெறவுள்ளது.

இலங்கையின் ஆளுகையில் உள்ள ஆறாவது தீடை வரை இந்தப் படகு சேவையை நடத்தும் சாத்தியங்கள் தொடர்பில் நேரில் பார்வையிடுவதற்காக தலைமன்னார் கடற்படை முகாமில் இருந்து கடற்படை, மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், வன ஜீவராசித் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் குழு ஒன்று கடந்த 18 ஆம் திகதி செவ்வாயன்று தீடைகளிற்கு சென்று வந்துள்ளது.

வழியில் 3 ஆவது தீடையில் கடற்படையினரின் பாவனை அதிகம் என்பதனால் அந்தத் தீடையைச் சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்ற முடிவிற்கு குழுவினர் வந்துள்ளனர் எனத் தெரிகின்றது. மூன்றாவது தீடையில் இலங்கைக் கடற்படயினரின் கட்டுமானங்கள், கட்டடங்கள் உள்ளன. கடற்படையின் 'ரடார்' கருவிகள் கூட அங்கு பொருத்தப்பட்டுளன என்று பேச்சுகள் உண்டு. அதனால் அந்தத் தீடைக்கு உல்லாசப் பயணிகளின் உத்தேச படகுச் சேவைகள் நெருங்க அனுமதிக்கப்பட மாட்டா என்று கூறப்படுகின்றது.

இவ்வாறே பற்றைக் காடுகளைக் கொண்ட 4 ஆவது தீடையில் அதிக வெளிநாட்டுப் பறவைகள் தங்கியிருப்பதனால் அங்கும் உல்லாசப் பயணிகளை அனுமதிக்க முடியுமா, அது சுற்றுச் சூழல் மற்றும் வனஜீவராசிகளைப் பாதிக்குமா என்பது குறித்தும் ஆராயப்படுகின்றது.

அதேசமயம் கடற்படை வசமுள்ள மூன்றாவது தீடைக்கு நெருக்கமாக 4 ஆவது தீடை இருப்பதால் கடற்படையின் செயற்பாடுகளின் இரகசியத் தன்மை கருதி 4 ஆவது தீடைக்கும் வெளியாள்களை அனுமதிக்காமல் இருப்பது உசிதம் என்று கருதப்படுவதாகவும் கூறப்பட்டது.

இந்த படகுத் திட்டத்திற்கான செலவீனமாக 445 மில்லியன் ரூபா திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் 250 மில்லியன் ரூபாவும், இரண்டாம் கட்டப் பணிகளிற்கு 195 மில்லியன் ரூபாவும் செலவு ஏற்படும் எனக் கூறப்பட்டது.

இதற்கான முன் பதிவுகள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டன. 2024 அக்டோபரில் விருந்தினர்களின் எண்ணிக்கை 465 பேராகவும் (அதில் வெளிநாட்டவர் 120 பேர் எனவும்) குறிப்பிடப்பட்டுள்ளது.

திட்ட மீளாய்விற்கு 2025 இல் 48 மில்லியன் ரூபா குறிப்பிடப்படுகின்றது. திட்டத்திற்கான ஆளணி 2025ஆம் ஆண்டு ஏப்பிரலில் 25 பேராக இருக்கும் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இச் சேவையை நடத்த அனுமதியை வழங்குமாறு இறுதியாக 2025-01-20 அன்று சம்பந்தப்பட்ட நிறுவனம் மாவட்டச் செயலாளருக்கு எழுத்தில் கடிதம் வழங்கியுள்ளது.

இதற்காக 2025-03-09 அன்று சுற்றுலாப் பிரதி அமைச்சர் தலைமையில் மன்னார் மாவட்டத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இக் கலந்துரையாடலில் அழைக்கப்பட்ட தரப்புக்களில் வன ஜீவராசிகள் திணைக்களம் பங்குகொள்ளாத காரணத்தால் இறுதி முடிவுகள் எட்டப்படவில்லை.

சாதாரணமாக மீனவர்களே அனுமதி பெற்றே கடலிற்குச் செல்லும் நாட்டில், இத்திட்டத்தில் பிற நாட்டவர் கடலில் பயணிக்க இருப்பதனால், அதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி உண்டா என்று தேடிப் பார்த்தோம். பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இன்றி திட்டம் முன் நகர்ந்திருக்க மாட்டாது என்கின்ற வகையில் தேடியபோது 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாதுகாப்பு அமைச்சும் எழுத்து மூலமான அனுமதியை வழங்கியுள்ளது என்பது தெரிய வந்தது.

இந்த உல்லாசப் பயணத் திட்டம் நேரடியாக முழுமையாக மத்திய அரசினால் முன்னெடுக்கப்படுவதனால் இதன் மூலம் மாகாண சுற்றுலா அதிகார சபைக்கோ அல்லது உள்ளூராட்சி மன்றத்திற்கோ வருமானம் கிடைப்பது கடினம் என்றும் கூறப்படுகின்றது.

பூகோள ரீதியில் இந்திய எல்லை வரையில் இடம்பெறவுள்ள இத்திட்டத்தில் வெளிநாட்டவர்களும் சென்று வர முடியும் என்பதனால் இத்திட்டம் மீது இந்தியாவின் கழுகுப் பார்வை திரும்பும். அப்போதே இத் திட்டத்தின் இருப்பு எந்தளவிற்கு நெருக்கடிக்குள் அகப்படும் எனத் தெரிய வரும்.

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, அனலைதீவு போன்ற இடங்களில் சீனா மின் சாரத் திட்டத்தை ஆரம்பிக்க முற்பட்ட போதே அதனை ராஜதந்திர ரீதியில் இந்தியா தடுத்திருந்தது.

தற்போது தனக்கு மிக அண்மை வரையில் வரும் இத் திட்டத்தை இந்தியா எப்படி நோக்கும் என்பதனை பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---

## பட்ஜட் 114..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2025ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச்சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு அல்லது 'வரவு – செலவுத் திட்ட உரை' நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் கடந்த 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை 7 நாட்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் இடம்பெற்றது. இரண்டாவது மதிப்பீடு 109 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னர் பெப்ரவரி 27ஆம் திகதி முதல் நேற்று மார்ச் 21ஆம் திகதி வரை ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான குழு நிலை விவாதம் இடம்பெற்றது.

மேலும், நாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்ட 2025 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் அரசமைப்பின் 79 ஆவது உறுப்புரைக்கு அமைய சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இதற்கமைய, ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமாக அமுலுக்கு வருகின்றது.

---

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வேட்புமனுக்களை எல்லா இடங்களிலும் தாக்கல் செய்துள்ளது என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

---

## யாழில் தீயில் எரிந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதே இடத்தைச் சேர்ந்த தம்பிராசா கோதைநாயகி (வயது 62) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை தனக்குத் தானே தீ மூட்டி எரிந்த நிலையில் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அன்று இரவு 10.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

சாட்சிகளைக் கோப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

---

## ஏப்ரல் 5இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

"அனைத்து சுமைகளையும் தோளில் சுமந்துக்கொண்டு செல்கின்றோம். அரச சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அரச சேவையாளர்கள் வினைத்திறனான முறையில் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவை இரத்துச் செய்வேன். ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளின் சிறப்புச் சலுகைகயை இரத்துச் செய்யும் சட்ட மூலம் வெகுவிரைவில் சமர்ப்பிக்கப்படும். எவருடனும் எனக்குத் தனிப்பட்ட பகைமை கிடையாது. ஆகவே, நாட்டுக்காக எம்முடன் ஒன்றிணையுங்கள் என எதிர்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

ஒருசிலரின் உரையில் வேதனை மற்றும் அச்சம் வெளிப்பட்டுள்ளதைக் கண்டு நாங்கள் குழப்பமடையவில்லை. இவர்களின் வேதனை மற்றும் கோபத்தை விளங்கிக்கொள்ள முடிகின்றது. சிறந்ததை ஏற்றுக்கொள்ளவும், விமர்சனங்களைப் புறக்கணிப்பதற்கும் தயாராக வுள்ளோம். நாட்டு மக்களுக்கும், நாட்டுக்கும் பயனுடையதான வகையில் பொருளாதாரத்தைச் செயற்படுத்துவோம்.

உத்தியோகபூர்வமாக வங்குரோத்து நிலையடைந்த நாட்டையே பொறுப்பேற்றோம். இந்த ஆண்டு 4990 பில்லியன் ரூபா அரச வருவாய் எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில்,

06

## ஏப்ரல் 5இல்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கடன்களுக்கான வட்டி செலுத்தலுக்கு 2950 பில்லியன் ரூபா, அரச சேவையாளர்களுக்குச் சம்பள ஒதுக்கீடு 1352 பில்லியன் ரூபா, ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான ஒதுக்கீடு 4042 பில்லியன் ரூபா என்ற அடிப்படையில் காணப்படுகின்றது. மிகுதி 256 பில்லியன் ரூபா. இதுவே தற்போதைய பொருளாதார நிலைமை. ஆகவே, அவசரமடையக் கூடிய நிலையில் பொருளாதாரம் இல்லை என்பதை முதலில் விளங்கிக் கொள்ளுங்கள்.

அரச நிறுவனங்களின் கடன் மற்றும் நட்டம் ஆகியவற்றை எதிர்கொண்டுள்ளன. வருடாந்தம் இந்த நிலைமையே காணப்படுகின்றது. ஈட்டிக் கொள்ளும் வருமானத்தைக் காட்டிலும் செலவுகள் அதிகளவில் காணப்படுகின்றது. பொருளாதாரத்துக்கு இயைவானதாக செயற்படும் நிறுவனங்களுக்கு இடையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது.

பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் எம்மிடம் பல கேள்விகள் காணப்பட்டன. ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போதே நாணய நிதியத்தின் செயற்திட்ட யோசனை முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டில் இருந்து விலகுவோம் என்றே ஒரு தரப்பினர் எதிர்பார்த்தார்கள்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். முழுமையான அரசை நான்கு மாதங்களுக்கு முன்னரே அமைத்தோம். பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தினோம். கடந்த டிசம்பர் மாதம் 21ஆம் திகதி வங்குரோத்து நிலையில் இருந்து வெளியேறினோம். பிரதான கடன் வழங்குநர்களுடன் இணக்கமான தீர்மானத்துக்கு வந்துள்ளோம்.

வங்குரோத்து நிலையடைந்ததால் பாரிய நெருக்கடிகளை எதிர்க்கொண்டோம். கடவத்தை – மீரிகம அபிவிருத்திக்குச் சீன எக்சிம் வங்கி கடன் வழங்கியது. வங்குரோத்து என்று அறிவித்ததன் பின்னர் சீன வங்கி கடன் வழங்கலை இடைநிறுத்தியது. இந்த அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டதால் நிர்மாணிப்பு கம்பனிக்கு 46 பில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது. இது ஒரு எடுத்துக்காட்டு மாத்திரமே.

வங்குரோத்து நிலையில் இருந்து வெளியேறியதன் பின்னர் ஜப்பான் அரசின் 11 கருத்திட்டங்களும், சீனாவின் 76 கருத்திட்டங்களும் மீள ஆரம்பிக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இதுவே பொருளாதாரத்தில் ஸ்திர நிலைமை. சிறந்த எடுத்துக்காட்டு.

இந்திய அரசுடன் கூட்டிணைந்து சம்பூர் பகுதியில் மின்நிலையத்தை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்திய நிறுவனத்துக்கும், மின்சார சபைக்கும் 50: 50 என்ற வகையில் உரிமத்தைக் கொண்டதாக கூட்டு நிறுவனம் ஒன்று ஸ்தாபிக்கப்படும். இதனூடாக சம்பூர் பகுதியில் 120 மெகாவோட் மின்னுற்பத்தி நிலையம் ஸ்தாபிக்கப்படும். மின்சார சபை இதனைக் கொள்வனவு செய்யும். குறைந்தளவான விலையில் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருவார். இதன்போது சம்பூர் மின்நிலைய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான உறுதிப்பாட்டை வழங்கியுள்ளோம். மன்னாரில் 50 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யப்படும் காற்றாலை திட்டம் ஆரம்பிக்கப்படும்.

பொருளாதார ரீதியில் தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் மற்றும் கடன் வழங்நர்களுக்கும் நம்பிக்கையளித்துள்ளோம்.

டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதியை உறுதிப்படுத்தியுள்ளோம். வங்கிக் கட்டமைப்பின் மீதான சர்வதேச நாணய நிதியத்தின் நம்பிக்கையை வெற்றிக்கொண்டுள்ளோம். வங்கி வட்டி வீதத்தை ஒற்றை இலக்கத்துக்கு கொண்டு வந்துள்ளோம்.

வரி வருமானத்தை அதிகளவில் ஈட்டிக் கொள்ளும் அரச நிறுவனங்களின் கட்டமைப்பை மாற்றியமைத்துள்ளோம். இந்த மூன்று மாத காலங்களில் இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகியவற்றின் வருமானம் எதிர்பார்த்த நிலைமை காட்டிலும் அதிகரித்துள்ளது. இந்த சாதக நிலையை தொடர்ந்து மேம்படுத்திக்கொள்வோம்.

தனிப்பட்ட முயற்சியாளர்கள் பொருளாதாரத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கையின்மையை இல்லாது நம்பிக்கை கொள்ளும் சூழலை ஏற்படுத்தியுள்ளோம். தரவுகளை அடிப்படையாக்க கொண்டு பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தான் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நாளாந்தம் மீளாய்வு பணிகளை முன்னெடுத்துள்ளோம். அவதான நிலையில் இருந்துக் கொண்டு தான் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கியுள்ளோம்.

பொருளாதாரத்தை பலவீனப்படுத்தும் வகையிலான பொய்யை மக்கள் மத்தியில் குறிப்பிடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். இதனைத் தவிர்த்து வேண்டிய அளவில் அரசியல் செய்துக் கொள்ளுங்கள்.பொருளாதார ஸ்திரப்படுத்தல் என்பது அரசின் பொறுப்பு மாத்திரமல்ல, ஒட்டுமொத்த மக்களினதும், மக்கள் பிரதிநிதிகளினதும் பொறுப்பாகும். ஆகவே, பொருளாதாரம் தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்க வேண்டாம்.

பொருளாதார ரீதியில் ஏதேனும் சந்தேகம் காணப்பட்டால் எம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுங்கள். சந்தேகத்துடனான விடயங்களை மக்கள் மத்தியில் குறிப்பிட வேண்டாம். பொருளாதார ரீதியிலான விடயங்களுக்காகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாராகவுள்ளேன்.

பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை ஆட்சிக்கு வந்தவுடன் முன்னெடுத்தேன்.

நெற்பயிர்ச்செய்கைக்கான நிவாரண கொடுப்பனவை 15 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தேன். அஸ்வெசுன நலன்புரித் திட்டத்தின் சகல கொடுப்பனவுகளையும் அதிகரித்துள்ளோம். நலன்புரிக் கொடுப்பனவு திட்டத்தில் இருந்து நீக்கப்படும் பட்டியலில் இருந்த 8 இலட்ச பயனாளர்களை மீண்டும் திட்டத்துக்குள் உள்வாங்கியுள்ளோம். நெருக்கடியான நிலையில் எவரையும் புறக்கணிக்கவில்லை.

16 இலட்ச மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக 6000 ரூபா வழங்கியுள்ளோம். அதேபோல் நீரழிவு நோயாளர்கள், சிரேஷ்ட பிரஜைகளுகள், விசேட தேவையுடையவர்களுக்கான கொடுப்பனவை அதிகரித்துள்ளோம்.

புலமைப் பரிசில் மற்றும் மாஹபொல கொடுப்பனவுகளை சடுதியாக அதிகரித்துள்ளோம். பெற்றோர் இல்லாத பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கும் விசேட கொடுப்பனவுகளை வழங்கும் முன்மொழிகளை முன்வைத்துள்ளோம். அநாதை இல்லங்களில் வாழும் பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டு பாரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே எவரையும் நாங்கள் புறக்கணிக்கவில்லை. மறக்கவில்லை.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரச சேவையாளர்களும், மூளைசாலிகளும் நாட்டை விட்டு வெளியேறும் நிலையே காணப்பட்டது. நெருக்கடியான நிலையில் அரச சேவையாளர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத்தை அரச சேவைக்குள் உள்ளடக்குவதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அரச சேவையாளர்களின் அடிப்படை சம்பளம், மேலதிக கொடுப்பனவு மற்றும் இதர கொடுப்பனவுகள் அனைத்தும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த சம்பள அதிகரிப்பு எதிர்வரும் மாதம் முழுமையாக கிடைக்கப்பெறும்.உழைக்கும் போது செலுத்தும் வரி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே , வினைத்திறனான சேவையை எதிர்பார்க்கின்றோம்.

நாடாளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு வேண்டாம் என்று கடிதம் வழங்கியுள்ளேன். மாற்றத்தை என்னில் இருந்தே ஆரம்பிப்பேன். கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவையும், ஜனாதிபதிக்கான கொடுப்பனவையும் பெற்றுக்கொண்டு பலர் திருட்டுப் பூனை போல் இருந்துள்ளார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சரானதன் பின்னர், உறுப்பினருக்கான கொடுப்பனவும் கிடைக்கப்பெறும், அமைச்சருக்கான கொடுப்பனவும் வழங்கப்படும். கரண்டி கையில் உள்ளதால் இவர்கள் தமக்கு வேண்டியதைப் போன்று பரிமாற்றிக் கொண்டார்கள்.

என் அரசின் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் அமைச்சு , பிரதி அமைச்சு பதவிகளுக்கான கொடுப்பனவுகளை மாத்திரமே பெறுகின்றார்கள். இந்த நாட்டை திருத்துவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். மக்களின் வரிப்பணத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துகின்றேன். நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்கும், முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை வரையறுப்பதற்கும் உரிய சட்டமூலம் வெகுவிரைவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும். அனைவரும் கையுயர்த்தத் தயாராக இருங்கள்.

10 இலட்சமாகக் காணப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதி கொடுப்பனவு 2 இலட்சத்து 50 000 ரூபாவாகக் குறைக்கப்படும். கோவப்பட வேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் கிடையாது. நாட்டைக்

07

# த பினான்ஸ் என்ற நிதி நிறுவனத்தில் பணம் வைப்பிலிட்டவர்களுக்கு நீதி வேண்டும்

## சபையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கோரிக்கை




த பினான்ஸ் என்ற நிதி நிறுவனத்தில் பணத்தை வைப்பிலிட்ட மக்களுக்கு உரியத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று குழுநிலை விவாதத்தில் கருத்துரைத்த அவர், மூடப்பட்ட குறித்த நிறுவனத்தில் பணத்தை வைப்பிலிட்ட மக்களுக்கு இதுவரையில் தீர்வு வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிறுவனம், மூடப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னரும் அந்த நிறுவனத்தினால் சுமார் ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி திரட்டப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், த பினான்ஸ் நிறுவனத்தின் சொத்துக்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ள நிலையில், தற்போதைய மதிப்பீட்டை விடவும் குறைந்த அளவில் அவை விற்பனை செய்யப்படுவதாக அந்த மக்களுக்குச் சந்தேகம் நிலவுகிறது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

# ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தை வலுப்படுத்த ஜப்பானிடமிருந்து 590 மில்லியன் ரூபா நிதியுதவி



ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் தீயணைப்புப் பிரிவினை வலுப்படுத்துவதற்காக ஜப்பான் 590 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கியது.

நாட்டிலுள்ள 14 ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களில் உள்ள 285 நிறுவனங்களில் 145,000 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

மேற்படி முதலீட்டு வலயங்களுக்காக முதலீட்டு சபையின் ஊடாக உபகரணங்களை வழங்குதல் மற்றும் வசதிகளை மேம்படுத்துவதற்காக இந்த நிதியுதவி பயன்படுத்தப்படும் என நிதியமைச்சு தெரிவித்தது.

## ஏப்ரல் 5இல்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டியெழுப்ப அரசியல்வாதிகள் அர்ப்பணிப்பு செய்வார்களாயின், அரச சேவையாளர்களும் ஒத்துழைப்பு வழங்குவார்கள். வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு சிறந்த முறையில் தீர்வு காணப்படும். 35 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும். தகுதிகளின் அடிப்படையில் தான் அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்படும். முறையற்ற வகையில் நியமனங்களை வழங்க முடியாது. கடந்த கால அரசுகள் முறையற்ற வகையில் அரச சேவைகளுக்கு நியமனங்களை வழங்கியதால்தான் அரச சேவை கட்டமைப்பு இன்று நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. ஆகவே, இதனை மாற்றியமைக்க வேண்டும். அரசியலுக்காக இந்த விடயத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு தொடர்பில் உப குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. குறித்த அறிக்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சிறந்த மாற்றத்தை எதிர்பார்த்துள்ளோம். அனைவரும் முறையாக வரி செலுத்த வேண்டும். வரி மோசடி செய்பவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். செலுத்தப்படும் வரியின் ஒவ்வொரு ரூபாவும் சிறந்தமுறையில் பயன்படுத்தப்படும் என்று வரிச் செலுத்துவோருக்கு உறுதியளிக்கிறேன். வரி செலுத்துங்கள். நாங்கள் அதனை பாதுகாக்கிறோம். வரி செலுத்துவோருக்கு விசேட சலுகை பொதிகள் வழங்கப்படும்.

வரி செலுத்தும் வர்த்தகர் வீதியில் வாகனத்தை நிறுத்தி வைத்து காத்துக் கொண்டிருக்கிறார். வரியை செலவிடுபவர்கள் சுகபோகமாகச் செல்கின்றார்கள். இவ்வாறான நிலையில் எவ்வாறு வர்த்தகர்கள் வரி செலுத்துவார்கள். இந்த நிலையை மாற்றியமைப்போம். மக்களின் வரி சிறந்த முறையில் பயன்படுத்தப்படுமாயின் வரி செலுத்துவோர் முறையாக வரி செலுத்துவார்கள். இதற்கான சூழலை உறுதிப்படுத்துவோம். சுங்கம் மற்றும் இறைவரித் திணைக்களத்தில் இருந்து இதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரச சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அனைவரும் சிறந்த முறையில் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். ஊழல் முழுமையாக இல்லாதொழிக்கப்படும். ஊழல் என்பது பொருளாதாரக் குற்றம். ஆகவே, ஊழல் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுப்போம். எனவே, அரச ஊழியர்கள் அனைவரும் தயவு செய்து பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஊழல் இருந்தால் வேலையில்லை, வீடு செல்ல வேண்டும்.

மன்னார் காற்றாலை மின்திட்ட உற்பத்திக்கு குறைவான விலையில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மக்களின் சுமைகளை தோளில் சுமந்துக் கொண்டு தொங்கு பாலத்தில் செல்கின்றோம். ஒரு ரூபா கூட மோசடி செய்வதற்கு எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை. இது குடும்ப அரசோ அல்லது நண்பர்களின் அரசோ இல்லை. இது மக்களின் அரசு.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி எதிர்கால இலக்கு நோக்கி பயணிக்கின்றோம். இதில் என்ன தவறுள்ளது. ஏன் இதனை மாற்றியமைக்க வேண்டும். தற்போதைய முன்னேற்றத்தை பலவீனப்படுத்தும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடியும். எம்மை ஆசிர்வதிப்பதும், ஏற்றுக்கொள்வதும் தவிர வேறொன்றும் எதிர்க்கட்சிகளுக்கு கிடையாது. ஊடகங்கள் அரசியல் செய்த காலம் முடிவடைந்துள்ளது. அதனால்தான் நான் ஜனாதிபதிபதியாகியுள்ளேன். ஊடக அரசியல் தோல்வியடைந்துள்ளது. மக்களுடனான எமது அரசியல்தான் வெற்றி பெற்றுள்ளது.

எவருடனும் எனக்கு தனிப்பட்ட பகைமை கிடையாது. ஆகவே தயவு செய்து மாற்றமடையுங்கள். நாட்டைக் கட்டியெழுப்பும் அரிய வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. இதனைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்வோம்.

சுதந்திரத்துக்குப் பின்னர் கிடைத்த அனைத்து வாய்ப்புக்களையும் தவறவிட்டோம். பெருந்தோட்ட மக்கள் மற்றும் வடக்கு மக்களை இணைத்துக் கொண்டு பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. 1948 ஆம் ஆண்டு கிடைத்த சிறந்த வாய்ப்பை முறையாக பயன்படுத்திக் கொண்டிருந்தால் முன்னேற்றமடைந்திருக்கலாம். ஆகவே, தற்போதைய அரிய வாய்ப்பு ஒருபோதும் பலவீனமடையப் போவதில்லை. நாட்டை முன்னேற்றும் இலக்கை வெற்றிகொள்வோம். இந்தச் சிறந்த வாய்ப்பில் எதிர்க்கட்சிகளும் பங்குதாரர்களாக வேண்டும் என்று அழைப்பு விடுகின்றேன்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலுக்கு வந்த சுடலை ஞானம்!

தென்னிலங்கை அரசியல் தலைவர்களுக்கு ஒரு பரவணிப் பழக்கம் உண்டு. ஆட்சியில் இருக்கும் போது அதிகாரப் பித்து தலைக்கு ஏறி அபத்தமாக நடந்து கொள்வார்கள். செருக்கோடு செயற்படுவார்கள். பதவியும் அதிகாரமும் இழந்த பின்னர் அவர்களுக்கு 'ஞானம்' பிறந்து விடும். ஆயினும் அது காலம் பிந்திய சுடலை ஞானமாகத்தான் பெரும்பாலும் இருக்கும். கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வது போல - குதிரை ஓடிய பின் லாயத்தை மூடுவது போல - அவர்களது பேச்சும் செயற்பாடும் அப்போது அமையும்.

அதற்கு தாமும் விதிவிலக்கல்லர் என்று இப்போது தமது கருத்து வெளிப்பாட்டின் மூலம் அம்பலப்படுத்துகின்றார் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

"நான் இலங்கையைச் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்வதை எப்போதும் எதிர்த்து வந்துள்ளேன். ஆயினும், சொன்னதைச் செய்யுங்கள் என்கிறேன். ஐ.நாவுக்கு இலங்கை அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உள்ளகப் பொறிமுறையின் கீழ் நீதியை நிலைநாட்டுங்கள். யார் குற்றவாளி என்றாலும் தண்டியுங்கள். மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குங்கள்." - என்றெல்லாம் இப்போது பேசுகின்றார் ரணில் விக்கிரமசிங்க.

தாம் ஜனாதிபதியாக இருந்த போது - நிறைவேற்ற அதிகாரத்தைக் கைகளில் வைத்திருந்த போது - நாடாளுமன்றத்தின் போதிய ஆதரவு தம் வசம் இருந்த போது - இவை எவை குறித்தும் நடவடிக்கை எடுக்காதவர் - சிரத்தை காட்டாதவர் - ஏன், அலட்டியே கொள்ளாதவர் - ரணில் விக்கிரமசிங்க. இப்போது பதவி இழந்ததும் தத்துவம் பிளக்கின்றார் அவர்.

சர்வதேச பங்களிப்போடு, கலப்பு பொறிமுறையின் கீழ், நீதியை நிலைநாட்டவும், பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தவும், பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் பெற்றுக் கொடுக்கவும், இழப்பீடுகளை வழங்கவும், மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு வாக்குறுதி அளித்தது அவர் பிரதமராக இருந்த நல்லாட்சி அரசுதான்.

அளித்த வாக்குறுதியிலிருந்து அவரது அரசுதான் முதலில் குத்துக்கரணம் அடித்து விலகியது. ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் ஜெனிவாவில் சர்வதேசப் பங்களிப்போடு இணக்கமேற்படக் காரணமாக இருந்த அவரது அரசே பின்னர் கொடுத்த வாக்குறுதியிலிருந்து பின் வாங்கி, அந்த இணக்கம் குழம்புவதற்கும் முதல் காரணமாகவும் அமைந்தமை மறுக்கக் கூடியது அல்ல.

சில ஆண்டுகள் கழித்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வந்து ஆட்சியதிகாரத்தைக் கையில் எடுத்த பின்னர் கூட, இப்போது கூறுகின்ற விடயங்களையோ அல்லது அதற்கு மேல் அப்போது தெளிவாக அளித்த வாக்குறுதிகளையோ நிறைவேற்றுவதற்கு நடவடிக்கையே எடுக்காதவர் ரணில் விக்கிரமசிங்க.

இப்போது மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்குங்கள், அதிகாரப் பகிர்வை அதன் மூலம் நடைமுறைப்படுத்துங்கள் என்றெல்லாம் தத்துவம் பிளக்கும் அவர்தான் மாகாண சபைத் தேர்தலையே நடத்தாமல் காலவரையறையின்றிதைத் தள்ளிப் போடுவதற்கு தாம் முன்னெடுத்த நடவடிக்கையை திருத்துவதற்கு - பிராயச்சித்தம் செய்வதற்கு - தம்முடைய ஜனாதிபதி பதவி காலத்தில் கிடைத்த அரிய வாய்ப்பையும் குள்ளநரித் திட்டத்தோடு வேண்டுமென்றே குழப்பியடித்தார். அதற்கு மேலும் சென்று உள்ளூராட்சித் தேர்தலைக் கூட நடத்த விடாமல் ஜனநாயகப் படுகொலை புரிந்தார்.

அத்தகையவர் இப்போது தமிழருக்கு நீதி செய்யுங்கள், அதிகாரப் பகிர்வை அளியுங்கள், வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் என்றெல்லாம் வேதம் ஓதுகிறார் - சாத்தான் போல.

அதிகாரம், பதவிகள் எல்லாம் இழந்து, நடுவீதிக்கு வந்த பின்னர் இப்போது அவருக்கு சுடலை ஞானம் பிறந்திருப்பதைத்தான் அவரது இந்த உபதேசங்கள் சுட்டி நிற்கின்றன.



# ஐக்கிய அமெரிக்க இந்து - பசுபிக் கட்டளையின் கட்டளை அதிகாரியுடன் ஜனாதிபதி சந்திப்பு

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் ஐக்கிய அமெரிக்க இந்து – பசுபிக் கட்டளையின் கட்டளை அதிகாரி அட்மிரல் சாமுவேல் ஜே.பபாரோ ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இந்த சந்திப்பானது ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு பாராட்டு தெரிவித்த அதேநேரம், இந்து சமுத்திர வலயத்தை பாதுகாத்து அமைதியான இந்து சமுத்திர வலயத்தை பேணுவதற்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்பையும் அட்மிரல் பபாரோ பாராட்டினார்.

இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவிற்கு இடையில் காணப்படும் வலுவான தொடர்புகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லவும், இலங்கை அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக்கிக்கொள்ளவும் தனது ஒத்துழைப்பை வழங்குவதாக அட்மிரல் ஜே.பபாரோ தெரிவித்தார்.







# வடக்கில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## காணி ஆணையாளரிடம் ஆளுநர் கோரிக்கை

வடக்கு மாகாணத்திலுள்ள அரச காணிகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், காணி ஆணையாளர் நாயகம் சந்தன விடம் கோரிக்கை முன்வைத்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் அழைப்பின் பேரில் வருகை தந்துள்ள காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அவரது குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக நடமாடும் சேவையை முன்னெடுத்தனர். இதனைத் தொடர்ந்து மாகாண மட்டத்திலான பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் உயர்மட்டக் கலந்துரையாடல் கிளிநொச்சியிலுள்ள வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் பங்கேற்புடன் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண காணி ஆணையாளர் சோதிநாதன்,

“கடந்த இரண்டு நாள்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின்போது பிரச்சினைக்குரிய காணிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. அரச காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் ஊடாக 500 மில்லியன் ரூபா வருமானம் இந்த ஆண்டு பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். மேலும், வடக்கு மாகாணத்தில் 18,273 பேர் காணிகள் இல்லாமல் உள்ளனர். இதனைவிட, வெளிப்படுத்தல் உறுதி மூலமாக சட்டவிரோதமாக காணிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளும், குளங்களின் நீரேந்துப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளும் வடக்கில் நடைபெறுகின்றன.” - என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன், மக்கள் காணிப் பிரச்சினைக்காகப் பிரதேச செயலகங்களுக்கும், மாவட்ட செயலகத்துக்கும் பல தடவைகள் அலைந்து திரிவதாகக் குறிப்பிட்டார். இவ்வாறான நடமாடும் சேவைகள் குறிக்கப்பட்ட காலத்துக்கு ஒரு தடவை நடைபெறுவது சிறப்பானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் மேலதிக மாவட்ட செயலர் (காணி) க.சிறிமோகன், வனவளத் திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களத்தின் காணி ஆக்கிரமிப்பால் முதலீட்டாளர்களுக்கு கூட காணி வழங்க முடியாத நிலைமை இருப்பதைத் தெரியப்படுத்தினார்.

மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலர்களும் இதே விடயத்தைச் சுட்டிக்காட்டினர்.

இது தேசிய ரீதியான பிரச்சினை என காணி ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

தேசிய ரீதியான பிரச்சினை என்ற போதும் வடக்கு மாகாணமே அதிகமாக இதன் பாதிப்பை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டிய ஆளுநர், போரால் மக்கள் இடம்பெயர்ந்ததை காரணமாக்கி எந்தவொரு அதிகாரிகளுக்கும் தெரியாமல் வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் உயர்மட்டக் கலந்துரையாடலுக்கான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என காணி ஆணையாளர் நாயகம் பதிலளித்தார்.









# யாழ். ஜனாதிபதி மாளிகையை வருமானம் ஈட்டும் வழியில் பயன்படுத்த வேண்டும்: சத்தியலிங்கம் எம்.பி.




"பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட யாழ். ஜனாதிபதி மாளிகையை பொதுமக்கள் பாவனைக்காகவும், தேசிய பொருளாதாரத்துக்கு வலுசேர்க்கும் வகையிலும் பயன்படுத்த வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் அரசாங்கத்திடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் அமைச்சுக்க ளின் பிரதான அமைச்சாக நிதி மற்றும் பொருளாதார திட்டமிடல் அமைச்சு காணப்படுகிறது. பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் நிதி வளம் மற்றும் திட்டமிடல் மிகவும் முக்கியமானது. பொருளாதார மேம்பாட்டுக்காக கொண்டு வரும் சகல திட்டங்களுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

இருப்பினும் இந்த சபையில் பேசும் ஓரிரு விடயங்கள் வெட்கத்துக்குரியன. யுத்த முடிவடைந்ததன் பின்னர் மரண அச்சத்தில் தான் வாழுந்தோம். கடந்த ஆட்சியாளர்கள் மற்றும் அரசாங்கங்கள் நிதி முகாமைத்துவத்தில் விட்ட பிழைகளினால் தான் இந்த நாடு இன்று கையேந்துகிறது.

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்திகள் தொடர்பில் கடந்த அரசாங்கங்கள் அவதானம் செலுத்தவில்லை. பயனற்ற வகையிலான திட்டங்களுக்கு அதிக முதலீடுகள் செய்யப்பட்டன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பாரிய போராட்டத்துக்கு மத்தியில் தான் குடியமர்த்தப்பட்டார்கள். இரண்டு தகரங்களுக்கு கீழ், மரத்துக்கடியில் தான் வாழ்ந்தார்கள்.இவ்வாறான பின்னணியில் யாழ்ப்பாணத்தில் பல கோடி ரூபா செலவில் ஜனாதிபதி மாளிகை நிர்மாணிக்கப்பட்டது. இதனால் எவ்வித பயனும் மக்களுக்கு கிடைக்கவில்லை.

பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்.ஜனாதிபதி மாளிகையை பொதுமக்கள் பாவனைக்காகவும், தேசிய பொருளாதாரத்துக்கு வலுசேர்க்கும் வகையிலும் பயன்படுத்த வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்." என்றார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான 425 வேட்புமனுக்கள் நிராகரிப்பு




எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட சுமார் 425 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் 57 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைப் பல மாவட்டங்களில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன வலியுறுத்தியுள்ளார்.

# யாழ். மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள்; நீதிமன்றப் படியேறும் கட்சிகளும் சுயேச்சைக் குழுவும்!









**(எஸ்.நிதர்ஷன்)**

மக்களை காப்பாற்றுவதற்காக போடப்பட்ட சட்டத்தினைக் கொண்டே தமக்கு எதிராக அநீதி இழைக்கப் பட்டுள்ளது என யாழ் மாநகரசபை யின் முன்னாள் மேயர் சட்டத்தரணி மணிவண்ணன் குற்றம் சுமத்தியுள் ளார்.

யாழ் மாநகர சபைக்கான தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை குறித்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து பேசிய அவர் –

”நேற்றைய தினம் (வியாழக்கிழமை) நாங்கள் பல்வேறு சபைகளுக்கான வேட்பு மனுக்களை தமிழ் மக்கள் கூட்டணி சார்பாக சமர்ப்பித்திருந் தோம். அந்த வேட்புமனுக்களை ஏற் றுக்கொள்ளப்பட்டனவா இல்லையா என அறிவிக்கப்பட்டபொழுது, யாழ் மாவட்டத்தின் 03 சபைகளுக்கான எமது வேட்புமனுக்களும் கிளிநொச்சி மாவட்டத்துக்கான கரைச்சிப் பிரதேச சபைக்கான வேட்புமனுவும் நிராகரிக் கப்பட்டிருக்கின்றன.

இவற்றுள் யாழ் மாநகர சபைக் கான வேட்புமனு நிராகரிக்கப்பட்ட மைக்கு நேற்றைய தினம் சொல்லப்பட்ட காரணம், 2023 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க உபபிரிவு 03 தேர்தல் சட்ட ஏற்பாட்டின் படி, எமது வேட்புமனு வோடு இணைக்கப்பட்ட ஒரு பெண் வேட்பாளரின் உறுதியுரையில், சாத்தி யப்பிரமான ஆணையாளர் கையொப்ப மிடவில்லை என்ற காரணத்தினால் குறித்த உறுதியுரை நிராகரிக்கப்பட்ட மையின் அடிப்படையில் எமது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக நேற்று சொல்லப்பட்டது.

மேலும் வலி தெற்கு உடுவில் பிர தேச சபைக்கான வேட்புமனுவும் நிரா கரிக்கப்பட்டுள்ளது. இதற்கு இளம் வேட்பாளர்களை உறுதிப்படுத்தும் வகை யில் வழங்கப்பட பிறப்புச்சான்றிதழ் முறையாக உறுதிப்படுத்தப்படவில்லை என காரணம் சொல்லப்பட்டிருக்கிறது.

அதே காரணத்துடன் பருத்தித்துறை மற்றும் கரைச்சி பிரதேச சபைக்கான வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட் டுள்ளன.

இந்நிலையில், யாழ் மாநகரசபை யின் போட்டியிடுகின்ற ஒரு முக்கிய தரப்பு நாம். கடைசியாக இரண்டு ஆண்டுகள் எமது தரப்பு யாழ் மாநகர சபையை ஆட்சி செய்தது. இம்முறையும் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற் படுத்தக்கூடிய தரப்பாக நாம் இருக்கி றோம்.

வெல்வதற்கான வாய்ப்புகளுடனும் நம்பிக்கையுடனும் தாக்கல் செய்யப் பட்ட யாழ் மாநகரசபைகான வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் வேட்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட சாத்தியப்பிரமணத்திலே, உறுதிப்படுத்தி ஒரு சாத்தியப்பிரமான ஆணையாளர் கையொப்பமிடவில்லை. எனினும் அவர் தனது பதவி முத்திரையை அதில் பதிந்தி ருக்கிறார். இதன் காரணமாக மொத் தப் பட்டியலும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கான நல்லூர் பிரதேசசபைக் கான வேட்பு மனுவில் ஒரு வேட்பாளர் நிராகரிக்கப்பட்ட போதும், தமிழரசுக் கட்சிக்கான நல்லூர் பிரதேசசபைக்கான வேட்பு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் கவலைக்குரிய விடயம், 2023ம் ஆண்டு திருத்தப்பட்ட உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல்கள் திருத்தச்சட்டத் தில் 31 உப பிரிவு 03 சொல்கிறது "ஒருவர் கையொப்பமிடவில்லையெனில் அதற்காக நிராகரிக்கப்பட முடியாது" என சொல்கிறது.

நிராகரிக்கப்பட முடியாது என சொல்லப்பட்ட சட்டத்தை வைத்து எனது வேட்புமனுவை நிராகரித்துள்ளார்கள்.

மேலும் குறித்த சட்டத்தில் 31 உப பிரிவு 01 எப்பொழுது வேட்புமனு நிரா கரிக்கப்படலாம் என சொல்கிறது.

அதன்படி குறித்த சட்டப்பகுதியின் பி பிரிவில் " மொத்த எண்ணிக்கையை கொண்ட வேட்பாளர்கள் வழங்கப்படாத விடத்து குறித்த வேட்புமனு நிராகரிக் கப்படலாம்".

குறித்த சட்டப்பகுதியின் எவ் பிரி வில் " சட்டத்தாலே தேவைப்படுத்தப்பட்ட பெண்களையோ இளைஞர்களையோ / யுவதிகளையோ உள்ளடக்காது விட்டால் வேட்புமனு நிராகரிக்கப்படலாம்" என சொல்லப்பட்டிருக்கிறது. வேட்புமனுப் பத்திரத்தின்படி எமது சமர்ப்பிப்பு சரியாக உள்ளது.

31 உப பிரிவு 03ன் படி சாத்தியக் கடதாசி கையொப்பமிடப்படவில்லை எனில் குறித்த வேட்புமனு நிராகரிக் கப்படக்கூடாது என சொல்லப்பட்ட நிலையிலும் அதே சட்டத்தை வைத்து எமது வேட்புமனுவை நிராகரித்துள் ளார்கள். இது இலங்கை சட்டம் ஒழுங் கில் இருக்கக்கூடிய மிகப்பெரும் அபத் தம்.

குறித்த சட்டமீறலை எதிர்த்து நாம் நிச்சயமாக வழக்குத் தாக்கல் செய்வ தற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள் ளோம். – எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வேட்புமனு நிராகரிப் புக்கு எதிராக எதிர்வரும் திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஊடகப் பேச்சா ளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக இன்று செய்தியா ளர்களிடம் பேசிய அவர். "கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் என நாடு முழுவதும் 250 வேட்புமனுக்கள் நிரா கரிக்கப்பட்டுள்ளன. எம்மை பொறுத்த வரையில் ஒரே காரணத்தின் அடிப் படையிலேயே 09 இடங்களுக்கான மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இளம் வேட்பாளர்களை உறுதிப் படுத்தும் வகையிலான அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிறப்புச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாமையே நிராகரிப்புக் கான காரணமாக சொல்லப்பட்டுள்ளது.

ஆயினும் நாங்கள் சகல சபை களிலும் தேவையான இளைஞர்க ளுக்கான அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிறப் புச்சான்றிதழ்கள் வழங்கியிருக்கி றோம்.

உரிய இடத்தில் உரிய உறுதிப்படுத் தல்களுடன் பெற்றுக்கொண்ட பிறப்பு சான்றிதழ்களுக்கான போட்டோ பிரதிகள் சமாதான நீதிவானின் உறுதிப்படுத் தல்களுடன் வழங்கப்பட்டுள்ளன.

மூலப்பிரதிகள் வழங்கப்பட வேண் டும் என எங்கும் அறிவுறுத்தப்பட்டிருக்க வில்லை.

எம்மை பொறுத்தவரையில் அவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

சட்டத்தின் நோக்கம் குறித்த நபர்கள் இளைஞர்கள் என்பதை உறுதிப்படுத்து வதே ஆகும். இந்த விடயத்தை உறு திப்படுத்த பிறப்பு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை பிரதி வழங்குகி றோம். இவற்றை வைத்து குறித்த நபர் இளைஞரா, இல்லையா என முடிவு செய்ய முடியும். இந்த நிலையில் குறித்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தவறான ஒன்று.

இது தொடர்பாக நாம் ஏற்கனவே சட்டத்தரணியுடன் பேசியிருக்கிறோம். எதிர்வரும் திங்கட்கிழமை இது குறித்த வழக்கு தாக்கல் செய்யப்படும்" – எனத் தெரிவித்தார்.

இதேவேளை பிறப்பு சான்றிதழை உறுதிபடுத்தும் விவகாரத்தில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக வல்வெட்டித் துறையில் சுயேச்சைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிரா கரிக்கப்பட்டமை தமக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட அநீதி எனவும் இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வ தற்காக நீதிமன்றத்தை நாடவுள்ள தாகவும் குறித்த சுயேச்சைக் குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# மாதகல் கடலில் குளிக்கச் சென்ற இணுவில் இளைஞர் சடலமாக மீட்பு





மாதகலில் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவர் மரண மடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளார் என இளவாலைப் பொலிஸார் தெரி வித்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவ தாவது:-

இணுவில் பகுதியில் இருந்து இளை ஞர் குழுவொன்று மாதகல் கடற்கரை யில் சமைத்து, உணவை உண்ப தற்காக நேற்று முற்பகல் 11 மணிக்கு வருகை தந்துள்ளது. அக்குழுவினர் 3.15 மணியளவில் கடலில் குளிக்க சென்றுள்ளனர் .

அப்போது இணுவில், கோயில் வாசல், காங்கேசன்துறை வீதி என்ற விலாசத்தைக் கொண்ட பிரேமானந் சாருடன் (வயது 20) எனும் இளைஞர் கடலில் குளிக்க முற்பட்ட பொழுது கடலில் அடித்து செல்லப்பட்ட நிலையில், பொது மக்கள் பொலிஸாரின் உதவியுடன் மாலை 5.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இளைஞனின் உடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப் பட்டது. இளவாலைப் பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# மரணமடைந்த மாணவிக்கு தேகாந்த நிலையில் பட்டம்!




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் கல்வி கற்று, கற்கை நெறியைப் பூர்த்தி செய்த பின்னர் சுகவீனம் காரணமாக மரணமடைந்த மாணவி ஒருவருக்குத் தேகாந்த நிலை யில் கலைமாணிப் பட்டம் வழங்கப் பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பட்ட மளிப்பு விழாவின் மூன்றாம் நாள், முதலாவது அமர்வின் போது சுபீனா குணரத்னம் என்ற மாணவி கலை மாணிப் பட்டத்துக்கு உரித்துடையவ ராக்கப்பட்டமையை உறுதிப்படுத்தி தேகாந்த நிலையில் அவரது பட்டம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

பெற்றோர் பட்டம் பெற்ற அந்தத் தருணம் உணர்ச்சி மிகுந்ததாக அவை யில் இருந்தவர்கள் கண்ணீர் மல்க அமர்ந்திருந்ததைக் காணக்கூடிய தாகவிருந்தது.

# ஓய்வூதியத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த 2,000 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!

## ஓய்வூதிய கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

(பா.சதீசன்)



கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரை அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு நாட்டின் நிலைமை காரணமாக கோட்டாபய அமைச்சரவையினால் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், ஓய்வூதியத்தை எதிர்பார்த்திருந்த 2000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகளை உரியவர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் உறுப்பினர் ரவிகரன் மேலும் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சின. மீதான வரவு – செலவுத் திட்டக் குழுநிலை விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

வடமாகாண ஓய்வூதியர் உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் அமைப்புதங்களுக்குள்ள குறைகளை இப்படித் தெரிவிக்கின்றார்கள் என்பதை ஓய்வூதியர்களின் நலன் கருதி தங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்.

கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டுவரை ஓய்வு பெற்றவர்களுக்கு 2020-01-01இல் வழங்குவதற்குரிய ஓய்வூதியமானது நாட்டின் நிலைமை காரணமாக கோட்டாபய அமைச்சரவையினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக தேசிய மக்கள் சக்தி சார்பான ஓய்வூதியர் சங்கத்தினர் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து போராட்டங்களையும் முன்னெடுத்து வந்தனர். வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அப்போது அவ்வாறு போராடிய தேசிய மக்கள் சக்தி ஆதரவு தொழில் சங்கங்கள் தேசியமக்கள் சக்தி ஆட்சியமைத்தால் இப்பிரச்சினை தீர்க்கப்படும் என நம்பிக்கையூட்டி வந்தனர்.

இந்நிலையில் 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டுவரை ஓய்வுபெற்ற பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் தேசிய மக்கள் சக்தியின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் இதற்கு தீர்வுகிடைக்கும் என எதிர்பார்த்திருந்தனர்.

அதாவது 2020ஆம் கிடைக்கவேண்டியஓய்வூதியக்கொடுப்பனவு2025ஆம் ஆண்டுவரை, ஐந்தாண்டுகளாக பெறமுடியாது காத்திருந்தவர்களுக்கு தற்போது வரவு – செலவுத் திட்டத்தில் அந்தக் கொடுப்பனவு மூன்று கட்டங்களாக 2027வரை வழங்கக் காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவு பெறவேண்டிய 2000 பேரளவிலான ஓய்வூதியர்கள் இறந்து விட்டனர். இந்நிலையில் தற்போதைய அரசும் ஓய்வூதியர் வாழ்வுக் காலம் பற்றிசிந்திக்காது, குறித்த ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்குவதை மேலும் மூன்றாண்டுகளுக்கு பிற்போட்டுள்ளதென கவலையடைகின்றனர்.

அரசபணியில் தங்களுடைய கரிசனையைப் பண்பாகச் செய்து, இன்று ஓய்வில் இருக்கும் சேவையாளர்களை நிம்மதியாக ஓய்வுக் காலத்தை கழிப்பதற்கு உதவி செய்யுங்கள். அந்தக் கொடுப்பனவுகளை கூடியவிரைவில் உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

# ஆயுதக் குழுவினர் நான்கு பேருக்கு மட்டக்களப்பில் மரண தண்டனை!




மட்டக்களப்பு சந்திவெளியில் 2007 ஆம் ஆண்டு ஒருவரை துப்பாக்கியால் சுட்டு மரணத்தை எற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கிரான் மற்றும் சந்திவெளி பிரதேசங்களைச் சேர்ந்த 4 பேருக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் நேற்று வெள்ளிக்கிழமை மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு மாசி மாதம் 18ஆம் திகதி சந்திவெளியைச் சேர்ந்த மயில்வாகனம் ரவீந்திரன் என்பவர் ரி-56 ரக துப்பாக்கியால் அந்த பகுதியில் இயங்கிவந்த ஆயுதக் குழு ஒன்றைச் சேர்ந்தவர்களால் சுட்டு கொல்லப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக சந்திவெளி மற்றும் கிரான் பிரதேசங்களைச் சேர்ந்த தி.கிருஷ்ணரூபன், வ.திருச்செல்வம், கு.பாஸ்கரன், க. மகேந்திரன் ஆகிய 4 பேரை ஏறாவூர் பொலிஸார் கைது செய்து அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்தவழக்குவிசாரணைமட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றுவந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை மேல் நீதிமன்ற நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் மேற்பசி 4 பேரும் குற்றவாளிகள் என முடிவு செய்து அவர்களுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.




# மட்டக்களப்பில் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 161 ஆவது தேசிய பொலிஸ் வீரர்கள் தினம் அனுஷ்டிப்பு

(கனகராசா சரவணன்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றி உயிரிழந்த பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்களை நினைவு கூரும் தேசிய பொலிஸ் வீரர்கள் தினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலத்தின் முன் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர மலர் வளையம் வைத்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினார்.

நாடளாவிய ரீதியில் அனைத்து பொலிஸ் திணைக்களங்களிலும் நினைவு கூரப்பட்டுவரும் பொலிஸ் தினத்தையிட்டு மட்டக்களப்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் காரியாலத்தின் முன் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு மட்டு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பண்டார தலைமையில் இடம்பெற்றது.

இதில் கிழக்குமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.லலித் லீலாரத்தின மற்றும் பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், உயிர் நீத்தவர்களின் உறவுகள் கலந்து கொண்டனர். பொலிஸ் திணைகளக் கொடியேற்றப்பட்டு பொலிஸ்மரியாதை அணிவகுப்புடன் மலர் வளையம் வைத்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது..

மாவனெல்ல பிரதேசத்தில் 1864 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்ட நபர் ஒருவரை கைதுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட சபான் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் முதல் முதல் சுட்டுக் கொல்லப்பட்டமையை அடுத்து மார்ச் 21ஆம் திகதி பொலிஸ் வீரர்கள் தினமாக அறிவிக்கப்பட்டது.

1864 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி முதல் இன்று வரையான காலத்தில் சுமார் 5,759 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 417 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.











# 161 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் வவுனியாவிலும் நேற்று அனுஷ்டிப்பு

(கி.வசந்தன்)

உயிர் நீத்த மற்றும் யுத்தத்தில் உயிரிழந்த பொலிஸாரை நினைவு கூர்ந்து 161 ஆவது பொலிஸ் வீரர்கள் தினம் வவுனியாவில் அமைந்துள்ள வன்னி பிராந்திய பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் அமைந்துள்ள பொலிஸாரின் நினைவுத்தூபிக்கு அருகே நேற்றுக் காலை 7.30 மணியளவில் வன்னி மற்றும் கிளிநொச்சி பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் சமாந்த விஜய சேகர தலைமையில் அனுஷ்டிக்கப் பட்டது.


இலங்கைப் பொலிஸாரால் வருடா வருடம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பொலிஸ் வீரர்கள் தினம் நேற்றாகும். அத்துடன் யுத்த காலத்தில் உயிர் நீத்த பொலிஸாரும் இத்தினத்தில் நினைவு கூரப்பட்டு வருகின்றனர். வவுனியா பிராந்திய நிலைய வளாகத்தில் அமைக் கப்பட்டுள்ள பொலிஸ் வீரர்கள் நினைவுத் தூபியில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சோமரத்ன விஜயமுனி, வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்ச கர் அசோக குமார மற்றும் வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே.ஏ.ஏ.எஸ்.ஜெயக்கொடி, உயிரிழந்த பொலிஸாரின் குடும்ப உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற பொலிஸார், வவுனியா பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பிரிவிலுள்ள பொலிஸ் நிலையங்க ளின் பொறுப்பதிகாரிகள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டு உயிர் நீத்த பொலிஸாருக்கு அஞ்சலி செலுத்தி னார்கள்.









# பெரியாறு அணையை பராமரிக்க கோரி கேரளா நோக்கி விவசாயிகள் பேரணி

## தடுத்து நிறுத்தினர் பொலிஸார்




முல்லை பெரியாறு அணையில் பராமரிப்பு பணிகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கேரள எல்லையை முற்றுகையிட விவசாயிகள் பேரணியாக கிளம்பினர். பொலிஸார் இவர்களை தமிழக எல்லை அருகில் தடுத்து நிறுத்தினர்.

உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் அனில் ஜெயின் தலைமையில் தமிழக மற்றும் கேரள அதிகாரிகளையும் தொழில் நுட்ப வல்லுநர்களையும் உள்ளடக்கிய ஏழு பேர் கொண்ட குழுவினர் அணையை ஆய்வு செய்ய உள்ளனர். இந்நிலையில், இக்குழுவின் கவனத்துக்கு தமிழக விவசாயிகளின் கோரிக்கைகளை கொண்டு செல்லும் வகையிலும், கேரளாவின் ஆதிக்கத்தை கண்டித்தும் தமிழக விவசாயிகள் பேரணியாக கிளம்பினர்.

தமிழக எல்லை அருகே லோயர் கேம்ப் பஸ் நிலையத்தில் இருந்து கிளம்பிய விவசாயிகள் கேரள எல்லையை முற்றுகையிடச் சென்றனர். பெரியாறு வைகை பாசன விவசாய சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பென்னிகுவிக் பாலசிங்கம் மற்றும் தலைவர் மனோகரன் ஆகியோர் தலைமை வகித்தனர். மனித நேய மக்கள் கட்சியின் தெற்கு மாவட்ட செயலாளர் அப்பாஸ்மந்திரி, மாவட்ட வர்த்தகர் சங்க தலைவர் செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து கேரளாவை நோக்கி குமுளி மலைச்சாலை வழியே விவசாயிகள் பேரணியாக செல்ல முயன்றனர். இதனைத் தொடர்ந்து மலையடிவாரத்தில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடி அருகே விவசாயிகளை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. வீதியில் அமர்ந்து விவசாயிகள் மறியலில் ஈடுபட முயன்றனர். இவர்களிடம் பொலிஸார் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து அங்கிருந்த பென்னிகுவிக் மணிமண்டபம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உச்ச நீதிமன்ற தீர்ப்பின் படி பெரியாறு அணையில் பராமரிப்பு பணிகளை தாமதமின்றி நடத்த வேண்டும். பேபி அணையை பலப்படுத்துவதற்கு இடையூறாக உள்ள மரங்களை அகற்ற வேண்டும். கேரள நீர்ப்பாசன துறையினர் பெரியாறு அணையை விட்டு வெளியேற வேண்டும், அணை மறு ஒப்பந்த நகலை காட்சிப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட 14 அம்ச கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

# கொலை சம்பவங்களில் பிஹாரை விட தமிழகம் மோசமானதாக மாறிவிட்டது

## சீமான் விமர்சனம்



கொலைச் சம்பவங்களில் பிஹாரை விட தமிழகம் மோசமாக மாறிவிட்டது என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற சீமான் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழகத்தில் நாம் இன்னும் உயிரோடு இருக்கிறோம் என்று மன நிறைவு அடைந்து கொள்ளலாம். கடந்த ஆட்சியை விட தி.மு.க. ஆட்சி மோசமாக உள்ளது. தொடர்ந்து கொலைகள் நடைபெறுவதால் தமிழகம் பாதுகாப்பற்ற மாநிலமாக உள்ளது. பிஹாரில் தான் சாதாரணமாக கொலை நடந்து வந்தன. தற்போது தமிழகம் அதைவிட மோசமாகவிட்டது. பொலிஸாருக்கு கூட பாதுகாப்பு இல்லை.

தமிழகத்தில் டாஸ்மாக்கில் 1,000 கோடி ரூபா ஊழல் நடந்துள்ளதாக தகவல் வந்துள்ளது. டில்லியில் 150 கோடி ரூபா ஊழல் செய்ததற்கே அரவிந்த் கேஜ்ரிவாலை கைது செய்தனர். ஆனால் தமிழகத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அதேபோன்று ரேஷன் கடைகளில் அரிசி ஏற்றி, இறக்கும்போது வீணாகியதில் 950 கோடி ரூபாவுக்கு இழப்பு ஏற்பட்டதாக சொல்கின்றனர். அதற்கு எதுவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

திராவிடமும், தமிழ் தேசியமும் ஒன்று என்பதை ஏற்க முடியாது. திராவிடத்துக்கு எதிரானதுதான் தமிழ் தேசியமே. திராவிடம் தமிழ் மொழியை வைத்து பிழைக்கும். நீட் தேர்வு, கச்சதீவு பிரச்சினைகளை விட்டுவிட்டு வருமா? வராதா? என்று தெரியாத தொகுதி சீரமைப்பு பிரச்சினையை பேசி வருகின்றனர். தி.மு.கவினர் நடத்தும் பள்ளிகளில் தமிழ் படிக்க வாய்ப்பில்லை.

புதிய கல்விக் கொள்கையை எதிர்ப்பதாக கூறிவிட்டு, அதில் உள்ள இல்லம் தேடி கல்வியை செயல்படுத்தினர். இண்டியா கூட்டணியினர் ஆளும் மற்ற மாநிலங்களில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தும்போது தி.மு.க. ஏன் தயக்கம் காட்டுகிறது? தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம் சிறைக் கைதிகளை விடுவிப்பதாக கூறிவிட்டு, தற்போது ஆளுநர் மீது பழிபோடுகின்றனர். தமிழகத்தில் அனைவருக்கும் சமமான இலவச கல்வி, மருத்துவம், குடிநீர் இல்லை.

பல்வேறு கட்டமைப்பு வசதிகள் இல்லாத நிலையில் கடன் மட்டும் 9.50 லட்சம் கோடி ரூபாவாக உள்ளது. தமிழகம் கடனின் தான் முன்னிலை வகிக்கிறது. ஆனால் எந்த தகுதியும் இல்லாமல் நான் தான் நம்பர் ஒன் முதல்வர் என்று மு.க.ஸ்டாலின் கூறுகிறார். கொலை, கொள்ளை, ஊழல் குறித்த தி.மு.க. கூட்டணி கட்சியினர் வாய் திறந்தால், நான் கூட்டணி வைக்க தயாராக உள்ளேன்." என்றார்.



# சூடானின் ஜனாதிபதி மாளிகை மீண்டும் இராணுவத்தின் வசமானது

சூடான் இராணுவம் அந்நாட்டு ஜனாதிபதி மாளிகையை மீண்டும் கைப்பற்றியுள்ளது.

துணை இராணுவக் குழுக்கள் முன்பு ஜனாதிபதி மாளிகையை ஆக்கிரமித்திருந்தன என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.

2023 முதல், சூடான் இராணுவத்திற்கும் துணை இராணுவ குழுக்களுக்கும் இடையே மோதல்கள் உள்ளன.

சூடானின் மேற்குப் பகுதி இன்னும் இந்தக் குழுக்களின் வசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் கல்வித்துறையை கலைக்கும் உத்தரவில் கையெழுத்திட்டார் டொனால்ட் ட்ரம்ப்



அமெரிக்க கல்வித் துறையைக் கலைக்கும் நிர்வாக உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக அவர் பொறுப்பேற்றதில் இருந்து பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

இந்நிலையில் அமெரிக்க கல்வித் துறையைக் கலைக்கும் உத்தரவில் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் அமெரிக்கா கல்விக்காக அதிக நிதியை ஒதுக்கீடு செய்கின்றது .

எனவே, நாட்டின் செலவினங்களைக் குறைப்பதற்காகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் , இவ்விடயம் குறித்து அந்நாட்டு காங்கிரஸின் ஒப்புதலைப் பெறுவது அவசியம் என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# திடீரென மூடப்பட்டது ஹீத்ரோ விமான நிலையம்

மின்சாரம் துண்டிக்கப்பட்டதன் காரணமாக பிரித்தானியாவில் உள்ள ஹீத்ரோ விமான நிலையம் திடீரென மூடப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விமான நிலையத்திற்கு அருகில் உள்ள மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, உள்ளூர் நேரப்படி நள்ளிரவு 12 மணிவரை இந்த விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

ஹீத்ரோ விமான நிலையமானது பிரித்தானியாவில் உள்ள மிகப் பெரிய விமான நிலையம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 22.03.2025




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று அபாரமான வளர்ச்சி காணப்படும். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண் பீர்கள்.முக்கியமான முடிவுகள் எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று பணிகள் சுமூகமாக நடக்கும். உங்கள் பணிகளை திறம்படச் செய்வீர்கள்.

இன்று உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதற்கு உகந்த நாள். இன்று புதிய உறவை ஏற்படுத்திக்கொள்ள உகந்த நாள்.

சலுகைகள் மற்றும் ஊக்கத் தொகையாக இன்று பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் அனுகூலமாக இருக்காது. பதற்றம் நிறைந்து காணப்படும். நல்ல பலன்களைக் காண ஆன்மீகத்தில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வதால் உறவில் மகிழ்ச்சி குறையும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நகைச்சுவை உணர்வோடு பழக வேண்டும்.

இன்று சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும். பயணத்திற்கென பணம் செலவு செய்வீர்கள்.

இன்று பதற்றம் நிறைந்து காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க உங்களை அமைதியாய் வைத்துக் கொள்ளுங்கள்.




இன்று தேவையற்ற மன வருத்தங்கள் காணப்படும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது. பிரார்த்தனை மற்றும் தியானங்கள் மூலம் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணிகளில் தவறுகள் நேராமல் இருக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மனதை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் மகிழ்ச்சியை பராமரிக்கலாம்.

இன்று நிதிவளர்ச்சிக்கு சாதகமான நாளாக அமையாது. இன்று பண இழப்பு காணப்படும்இது உங்களுக்கு. ஏமாற்றத்தை அளிக்கும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிக்க இயலாது. கால் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். உங்கள் திறமையையும் புத்திசாலித்தனத்தையும் பயன்படுத்தி வெற்றி பெறலாம். இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படும்.பணிகளை குறித்த நேரத்துக்கு முன்பே முடிப்பீர்கள்.

உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணையை இன்புறச் செய்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு பணம் வர வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். உங்கள் சேமிப்பை இன்று அதிகரிக்க முடியும்.




இன்றைய நாள் சுறுசுறுப்புடன் இருக்காது. பதற்றமும் தனிமையும் காணப்படும். தான தர்மம் மற்றும் தொண்டுகளில் ஈடுபடுவதன் மூலம் ஆறுதல் பெறலாம். வெளிப்படையாக இருக்க வேண்டும். எதையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியில் ஆர்வம் குறைந்து காணப்படும். பணியிடச் சூழல் சலிப்பைத் தருவதாக இருக்கும். ஆர்வம் அதிகரிக்க புதிய யுத்திகளைக் கையாள வேண்டும்.

ஆர்வமின்மையும் பாதுகாப்பின்மை உணர்வும் காணப்படும். உங்கள் துணையிடம் அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் வேண்டும்.

நிதிநிலைமை இன்று சாதகமான நிலையில் காணப்படாது.




உங்கள் செயல்களில் சில தாமதங்கள் காணப்படும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை. கடவுள் வழிபாடு மற்றும் பிரார்த்தனையில் ஈடுபடுவதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளைக் கையாள்வது கடினமாக உணர்வீர்கள். பணியிடத்தில் உங்கள் சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உறவில் மகிழ்ச்சி நிலவ பொறுமை அவசியம். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவு பாதிக்கும். எனவே அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரும். சேமிக்கும் வாய்ப்பும் குறைவு.

ஒவ்வாமை பாதிப்புகள் காணப்படும்.




இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பொறுமையோடு இருக்க வேண்டும். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். ஆன்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணிச்சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்காது. சக பணியாளர்களுடன் தொடர்பு கொள்வதில் சிக்கல்கள் காணப்படும்.

நல்லுறவுக்கு அனுசரித்துப் போதல் வேண்டும். உங்கள் துணையிடம் அத்தகைய அணுகுமுறை மேற்கொள்வது உறவில் அன்பை வளர்க்கும்.

ஆன்மீக நோக்க பயணங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள். அதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.




உங்கள் லட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தற்போதைய சூழ்நிலையில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரித்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து விடுவீர்கள்.

உங்கள் பணியில் நீங்கள் வெற்றி பெற வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை நீங்கள் விழிப்புணர்வுடன் ஒழுங்கு முறையுடன் மேற்கொள்வீர்கள். பதவி உயர்வுக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவை ஏற்படுத்த முயல வேண்டும். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய முதலீடுகளுக்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.அது உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

இன்று சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.03.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல் திறன் காரணமாக மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

பண வரவு திருப்திகரமாக இருக்கும். நீங்கள் கணிசமான தொகையை சம்பாதிப்பீர்கள்.

தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை நல்ல ஆரோக்கியத்தை அனுபவிக்க உதவும்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. எதிர்பார்ப்புகளில் எம்மாற்றங்களும் குழப்பங்களும் காணப்படும். இந்தச் சூழ்நிலையை தவிர்க்க பிரார்தனை மேற்கொள்ள வேண்டும். குழந்தைகளின் வளர்ச்சி நீங்கள் எதிர்ப்பார்க்கும் அளவுக்குக் காணப்படாது.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் ஆற்றலுடன் பணியாற்ற திட்டமிடல் அவசியம்.

நீங்கள் விஷயங்களை லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் நகைச்சுவை உணர்வோடு பழக வேண்டும். இதனால் இருவரிடையே மகிழ்ச்சியை பராமரிக்க இயலும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும் செலவுகள் அதிகமாக காணப்படும் காரணத்தால் பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்சிகரமான நாளாக அமையாது. விருப்பமானவற்றை அடைய நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். தாமதங்களை சந்திப்பீர்கள். நல்ல விளைவுகளைப் பெறுவதற்கு பயனுள்ள முறைகளை பின்பற்றுங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். உங்கள் இலக்கை அடைவதில் தாமதங்கள் காணப்படும். உங்கள் பணிகளைக் கையாள்வதில் பொறுமை தேவை.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை கட்டுப்படுத்த வேண்டும். சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். நட்பு முறையோடு நடந்தால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். தேவையற்ற செலவினங்கள் காணப்பட வாய்ப்புள்ளது.

கால்களில் வலி காணப்படும்.




இன்று மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்தலாம். விருந்து விழாக்களில் கலந்து கொள்வது மகிழ்ச்சியை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். நீங்கள் செய்யும் பணிகளை விரும்பி மேற்கொள்வீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள். இதனால் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று நிதிநிலையை சிறப்பாக பராமரிக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. பங்கு வர்த்தகத்தில் ஈடுபட முயற்சிக்கலாம். அது உங்களுக்கு லாபகரமானதாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



# வவுனியாவில் வீதிகளை ஆக்கிரமிக்கின்ற கட்டாக்காலி மாடுகள்; களத்தில் இறங்கிய அதிகாரிகள் இரவோடு இரவாக மடக்கினர்!

**(கி.வசந்தன்)**

வவுனியா நகரசபையினால் வீதிகளில் நடமாடித் திரிந்த 50 கட்டாக்காலி மாடுகள் நேற்று முன்தினம் இரவு பிடிக்கப்பட்டன.

வவுனியா நகர எல்லைக்குட்பட்ட வீதிகளில் இரவு மற்றும் பகல் வேளைகளில் நடமாடும் கால்நடைகளால் அதிக எண்ணிக்கையான விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனையடுத்து நகரசபைக்குள்ள அதிகாரங்களை கொண்டு கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான ஒழுங்குகள் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதிகளில் பொதுப் போக்குவரத்துக்கு இடையூறாக நின்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட கால்நடைகள் நகர சபையினரால் பிடிக்கப்பட்டன.

கால்நடை உரிமையாளர்கள் தமது கால்நடைகளுக்குரிய அடையாளத்தை உறுதிப்படுத்திய பின் தண்டப்பணத்தினைச் செலுத்தி அவற்றை மீளப் பெற்றுச் செல்லுமாறு சபையினால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கட்டாக்காலி மாடு பிடி கூலி ஆயிரம் ரூபா, தண்டப்பணம் மூவாயிரம் ரூபா, நாள் ஒன்றிற்கான பராமரிப்புக் கட்டணம் ஆயிரம் ரூபா என்பவற்றைச் செலுத்த வேண்டும்.

10 நாள்களுக்குள் உரிமை கோரப்படாத கால்நடைகள் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நகர சபை அறிவித்துள்ளது.